நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

2021 யூன் 07 | சுற்றறிக்கை | 2021இன் 06ஆம் இலக்கம்

## கொவிட் -19 நோய்ப்பரவலிற்கு மத்தியில் வங்கித்தொழில் பணிகளை வழங்குதல்

இலங்கை மத்திய வங்கி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பொலிஸ் மா அதிபரின் ஒப்புதலை/ சம்மதத்தை பெற்றதையடுத்து, கொவிட்-19 நோயப்பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், தற்போது நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடுகளுக்கமைவாக வழங்கப்பட்ட அனைத்து உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைப்பிடித்து அத்தியாவசிய வங்கிப் பணிகளை முன்னெடுக்குமாறு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (உரிமம்பெற்ற வங்கிகள்) ஏற்கனவே கேட்டுக்கொண்டுள்ளது.

1. இதற்கமைய, கொவிட்-19 நோய்ப்பரவல் காலப்பகுதியில், அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகி இடைத்தடங்கலற்ற வங்கிப் பணிகளை வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்:

    i. வர்த்தக நிதியளித்தல், திறைசேரி தொழிற்பாடுகள், தீர்ப்பனவு நடவடிக்கைகள், ஓய்வூதியங்கள்/ சம்பளங்களின் கொடுப்பனவுகள் வாடிக்கையாளரின் ஏனைய அவசரக் கோரிக்கைகள்/ விசாரணைகள் போன்ற அத்தியாவசியப் பணிகளை வழங்குவதற்கு மாத்திரம் வங்கிக்கிளைகளைத் திறத்தல்;

    ii. உரிமம்பெற்ற வங்கிக்கிளைகளில் பணிக்கு சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை, ஒரு கிளைக்கு 15 ஊழியர்களை விடவும் விஞ்சலாகாது;

    iii. ஊழியர்கள் சுழற்சி முறையில் பணிக்கு சமூகமளித்தல் வேண்டும், அல்லது ஒவ்வொரு கிளையினதும் வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு, குறித்த சில தினங்களில் மாத்திரம் கிளைகளைத் திறத்தல்; மற்றும்

    iv. கிளை முகாமையாளர்கள், இணைக்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் வழங்கப்பட்ட விடயங்கள் உள்ளிட்ட தொடர்புடைய ஊழியரின் பயணத்திற்காக உரிய தகவல்களைக் கொண்ட கோரிக்கைக் கடிதத்தை வழங்குவதன் மூலம் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தின் முன் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2. உரிமம்பெற்ற வங்கிகள்:

    i. அத்தியாவசிய வங்கிப் பணிகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பது தொடர்பில், பொது மக்களுக்கு தெரிவிப்பதற்காக அறிவித்தல்களை வெளியிடுதல் வேண்டும்;

    ii. இக்காலப்பகுதியில், வங்கிக்கிளைகளைத் தொடர்புகொள்வதற்கான பல்வேறு விரும்பத்தக்க கொடுக்கல்வாங்கல் மூலங்களை கருத்திற்கொண்டு, கிளை ஊழியர்களின் தொடர்பு இலக்கங்கள் மற்றும் அவசர தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தல் உள்ளடங்கலாக அத்தியாவசிய வங்கிப் பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான தகவல்களை வாடிக்கையாளர்கள் அறிந்திருப்பதற்கான போதியளவு வழிமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்;

    iii. வாடிக்கையாளர் விசாரணைகளுக்கு பதிலளிக்கப்பட்டு அவர்களின் பிரச்சனைகள் துரிதமாகத் தீர்க்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்; மற்றும்

    iv. தன்னியக்க கூற்றுப் பொறிகள் (ATMs), பண வைப்புப் பொறிகள் (CDMs), பண மீள்சுழற்சிப் பொறிகள் (CRMs) மற்றும் நடமாடும் வங்கி ஊர்திகள் உள்ளடங்கலான இலத்திரனியல்/ டிஜிட்டல் வழிப் பயன்பாட்டை தொடர்ந்தும் வசதிப்படுத்தல் வேண்டும்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

உரிமம்பெற்ற வங்கிகளின் ஊழியர்கள் பணிக்கு சமூகமளிப்பதற்குரிய அனுமதிகளுக்கான கோரிக்கை மாதிரிப்படிவம்

| | |
|---|---|
| வங்கியின் பெயர் | |
| கிளையின் பெயர் மற்றும் முகவரி | |
| வங்கிக்கிளைக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையம் | |
| | |
| ஊழியரின் பெயர் (தே.அ.அ இலக்கத்தில் உள்ளவாறு) | |
| தேசிய அடையாள அட்டை இலக்கம் | |
| பதவி | |
| ஊழியர் அடையாள அட்டை | |
| வதிவிட முகவரி | |
| வதிவிடத்திற்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையம் | |
| பணிக்கு செல்வதற்கான குறித்த திகதிகள் | |
| வாகன இல. | |